**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம், (இ) திருவில்லிபுத்தூர்**

**முன்னிலை :– திரு.க.ஜெயக்குமார், பி.எல்., எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**விருதுநகர் மாவட்டம், (இ) திருவில்லிபுத்தூர்**

**2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15–ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.01/2023**
**இன்**
**LAOP No.578/2022**

1) நம்புசாமி (இறந்துவிட்டார்) ... கோருரிமையாளர்

2) கிருஷ்ணம்மாள்
3)லோகநாயகி
4) ராஜலட்சுமி
5) வெங்கடேசன் ... மனுதாரர்கள்/
உத்தேச 2 முதல் 5
கோருரிமையாளர்கள்

/எதிர்/

சிறப்பு மாவட்ட வருவாய் அதிகாரி,
சிப்காட் நில ஆர்ஜித அலுவலகம்
சாத்தூர். ...எதிர்மனுதாரர்/
சுட்டுகை அதிகாரி

இம்மனு 22.01.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள்/ உத்தேச 2 முதல் 5 கோருரிமையாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சுவாதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர்(நி.ஆ) திரு.பா.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை

செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் மனுவில் இறந்துபோன 1ம் கோருரிமையாளரான நம்புசாமிக்கு இதனடியில் காட்டப்பட்டுள்ள உத்தேச 2 முதல் 5 கோருரிமையாளர்களை வாரிசுதாரர்களாக பதிவு செய்து கொண்டு மனுவினை மேல் நடத்துவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனுதாரர்கள்/ உத்தேச 2 முதல் 5 கோருரிமையாளர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

2) மனுவில் 2ம் மனுதாரர் அசல் மனுவில் உத்தேச 2ம் கோருரிமையாளர் ஆவார். 3,4,5 உத்தேச கோருரிமையாளர்கள் மனுதாரருடைய மக்கள். அசல் மனுவில், 2ம் மனுதாரர் கணவருக்குப் பாத்தியப்பட்ட சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்காபுரம் கிராமத்தில் உள்ள புலன எண்.210/2C-ல் கண்ட 0.31.0(0.77 ஏக்கர்) ெஹக்டேர் நிலமும், சர்வே எண்.210/4A4-ல் கண்ட 0.28.0(0.69 ஏக்கர்)ெஹக்டேர் நிலங்களை எதிர்மனுதாரர் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்துக் கொண்டுள்ளார். அவ்வாறு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை மிகவும் குறைவு என மனுதாரர் கணவர் ஆட்சேபனை தாக்கல் செய்ததின் பேரில் கூடுதல் இழப்பீடு தொகை பெறுவதற்காக கோப்புகள் அனைத்தும் நில ஆர்ஜித சட்டம் பிரிவு 18-ன் கீழ் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன்பிரகாரம் மனுதாரர் கணவருக்கு நீதிமன்றத்திலிருந்து எல்.ஏ.ஓ.பி.எண்.578/2022 என

கோப்புக்கு எடுக்கப்பட்டு அழைப்பாணை பெறப்பட்டது. இந்நிலையில் 2ம் மனுதாரர் கணவர் நம்புசாமி கடந்த 20.03.2022–ம் தேதி உடல் நலம் சரியில்லாமல் 2ம் மனுதாரரையும் அவரது மக்களான 3 முதல் 5 வரையிலான உத்தேச மனுதாரர்களை மட்டும் வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு எவ்வித விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துபோய்விட்டார். அவ்வாறு இறந்துபோன 2ம் மனுதாரர் கணவருக்கு 2ம் மனுதாரரும் 3 முதல் 5 உத்தேச மனுதாரர்கள் மட்டும் வாரிசுதாரர்கள் ஆவார்கள். தங்களை தவிர வேறு யாரும் வாரிசுதாரர்கள் கிடையாது. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே அசல் மனுவில் கண்டுள்ள 2ம் மனுதாரர் கணவருக்கு 2ம் மனுதாரரையும் உத்தேச 3 முதல் 5 கோருரிமையாளர்கள் மட்டும் வாரிசுதாரராக பதிவு செய்து வழக்கினை தொடர்ந்து மேல் நடத்துவதற்கு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது. அவ்வாறு இல்லாத பட்சத்தில் அனேக இன்னலும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படக்கூடியதாக இருக்கும் என்றும் எனவே அசல் மனுவில் இறந்துபோன கோருரிமையாளரான நம்புசாமிக்கு மனுவில் காட்டப்பட்டள்ள உத்தேச 2 முதல் 5 கோருரிமையாளர்களை வாரிசுதாரர்களாக பதிவு செய்து கொண்டு வழக்கை மேல்நடத்துவதற்கு அனுமதி வழங்கி உத்தவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:–

3)மனுவில் 3வது பாராவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையாகும். மனு 4வது பாராவில் சொல்லப்பட்டுள்ள கோருரிமையாளர் நம்புசாமி 20.03.2022ம் தேதி இறந்துவிட்டார்

என்பதையும் மேற்படியாருக்கு இந்த மனுதாரர்கள் தான் வாரிசுகள் என்பதை மனுதாரர்கள் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல. மனுதாரர்கள் மேற்படி கோருரிமையாளர் நம்புசாமியின் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசுசான்றிதழ் முறையாக தாக்கல் செய்யும் பட்சத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்கலாம் என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர்கள் மனுவை அனுமதிக்கும் பட்சம் அரசுக்கு அனேக இழப்பும் இன்னலும் ஏற்படக்கூடும் என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ இல்லை.

<u>பிரச்சினைக்கான தீர்வு</u>:–

6) மனுதாரர்கள் தரப்பில், அசல் மனுவில் கோருரிமையாளரான நம்புசாமிக்கு பாத்தியப்பட்ட சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்காபுரம் கிராமத்தில் உள்ள புலன எண்.210/2C–ல் கண்ட 0.31.0(0.77 ஏக்கர்) ெஹக்டேர் நிலமும், சர்வே எண்.210/4A4–ல் கண்ட 0.28.0(0.69 ஏக்கர்)ெஹக்டேர் நிலங்களை எதிர்மனுதாரர் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்து கொண்டு, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட் இழப்பீட்டு தொகை மிகவும் குறைவு என்பதால் கோருரிமையாளர் நம்புசாமி ஆட்சேபனை செய்து கூடுதல்

இழப்பீடு தொகை பெறுவதற்காக கோப்புகள் அனைத்தும் நில ஆர்ஜித சட்டம் பிரிவு 18-ன் கீழ் நீதின்றத்திற்கு அனுப்பப்பட்டு எல்.ஏ.ஓ.பி.எண்.578/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இருந்த நிலையில், மேற்படி அசல் மனுவின் கோருரிமையாளர் நம்புசாமி உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 2 முதல் 5 வரையிலான உத்தேச கோருரிமையாளர்களை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு கடந்த 20.03.2022-ம் தேதி இறந்துவிட்டார் என்றும், அதற்கான ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பில் இருப்பதாகவும், எனவே மேற்படி அசல் மனுவில் இறந்துபோன கோருரிமையாளரான நம்புசாமிக்கு 2 முதல் 5 வரையிலான உத்தேச கோருரிமையாளர்களை வாரிசுதாரர்களாக பதிவு செய்து கொண்டு வழக்கினை மேல்நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

7)எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மேற்படி கோருரிமையாளர் நம்புசாமியின் இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசுசான்றிதழ் முறையாக தாக்கல் செய்யும் பட்சத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்கலாம் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாத பட்சத்தில் மனுவை அனுமதிப்பதால் அரசுக்கு அநேக இழப்பு ஏற்படும் என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

8) இருதரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது. அசல் மனு என்பது கோருரிமையாளராக நம்புசாமிக்கு பாத்தியப்பட்ட சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்காபுரம் கிராமத்தில் உள்ள புலன எண்.210/2C-ல் கண்ட 0.31.0(0.77 ஏக்கர்) ெ ஹக்டேர் நிலமும், சர்வே எண்.210/4A4-ல் கண்ட 0.28.0(0.69 ஏக்கர்)ெஹக்டேர் நிலங்களை எதிர்மனுதாரர்

சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்து கொண்டு, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகை மிகவும் குறைவு என்பதால் கோருரிமையாளர் நம்புசாமி ஆட்சேபனை செய்து கூடுதல் இழப்பீடு வழங்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். மேற்படி அசல் மனுவில் கோருரிமையாளர் நம்புசாமி ஆஜராகுவதற்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர் இறந்துவிட்ட காரணத்தினால் அறிவிப்பு திரும்ப வரப்பெற்றது என்பது ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது. இந்நிலையில் மேற்படி அசல் மனுவின் கோருரிமையாளராக நம்புசாமிக்கு 2 முதல் 5 வரையிலான உத்தேச கோருரிமையாளர்களை வாரிசுதாரர்களாக பதிவு செய்துகொண்டு அசல் மனுவை மேல்நடத்த வேண்டி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்று பரிசீலனை செய்கையில், அசல் மனுவில் கோருரிமையாளர் நம்புசாமி கடந்த 20.03.2022-ம் தேதி இறந்துவிட்டதாக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நம்புசாமியின் இறப்புச்சான்றிதழ் வாயிலாக தெரிய வருகிறது. மேலும் மேற்படி நம்புசாமி இறக்கும்போது இந்த மனுவின் உத்தேச 2 முதல் 5 கோருரிமையாளர்களான நம்புசாமியின் மனைவி மற்றும் குழந்தைகளான 1) கிருஷ்ணம்மாள், 2)லோகநாயகி,3)ராஜலட்சுமி,4) வெங்கடேசன் ஆகியோர்களையும் ஏற்கனவே இறந்துபோன நம்புசாமியின் தாயாரான வெங்கடம்மாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துள்ளார் என்பது மேற்படி நம்புசாமி என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் வாயிலாக தெரிய வருகிறது. நம்புசாமியின் தாயாரான வெங்கடம்மாள் இறந்துவிட்ட நிலையில், இம்மனுவின் மனுதாரர்கள் மட்டுமே

இறந்துபோன நம்புசாமி என்பவருக்கு தற்போது உயிருடன் இருக்கும் வாரிசுகள் ஆவார்கள். எனவே இறந்துபோன நம்புசாமியின் வாரிசுதாரர்கள் இம்மனுவில் கண்டுள்ள 2 முதல் 5 வரையிலான உத்தேச கோருரிமையாளர்கள் என்பது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாரிசு சான்றிதழ் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

9) மேலும் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் கோருரிமையாளர் நம்புசாமியின் இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை முறையாக தாக்கல் செய்யும் பட்சத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்யும் மனுவை அனுமதிக்கலாம் என்று எதிர்உரையில் கோரப்பட்டுள்ளது. மேற்படி பொருண்மை மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதியும், மனுதாரர்களுக்கு அவரது தரப்பை நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கவேண்டியது நீதியின்பால் அவசியமான ஒன்றாகும் என்பதாலும், மனுதாரர்கள் மனுவில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

10) முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. அசல் மனுவில் இறந்துபோன கோருரிமையாளரான நம்புசாமி என்பவருக்கு இம்மனுவின் கண்ட மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 5 கோருரிமையாளர்கள் வாரிசுதாரர்கள் என்று பதிவு செய்யப்பட்டு மனுவினை மேல்நடத்துவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு

செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்,**
**(இ)ஸ்ரீவில்லிபுத்தூர்.**

<u>உபய தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் :–</u> – இல்லை–

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்,**
**(இ)ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்
இ.ம.எண்.1/2023
இன்
LAOP No.578/2022
செவ்வை–வரைவு உத்தரவு
நாள் 15.02.2024